தமிழ் நாடு சட்டப் பேரவை

செவ்வாய்க்கிழமை, 1974 ஏப்ரல் 9

சென்னை செயிண்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

பள்ளப்பட்டியில் பெண்கள் பள்ளி

*782. வினா—**திரு. வா. மை. அப்துல் ஜப்பார் :** மாண்புமிகு கல்வி-சுற்றுலாத் துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

பள்ளப்பட்டி பேரூராட்சியில் (அரவக்குறிச்சி தொகுதி) அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி ஒன்று ஆரம்பிக்கும் செயற்குறிப்பு ஏதேனும் உள்ளதா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இல்லை.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : தலைவர் அவர்களே, சற்றேறக் குறைய 12,000 மக்கள் உள்ள அந்த ஊரிலே பெரும்பாலும் முஸ்லிம் மக்கள் வாழ்கின்றார்கள். முஸ்லிம் பெண்கள் கல்வியிலே மிகவும் பின்தங்கியவர்கள். சமீபத்தில்தான் தனியார்கள் ஆங்கிலோ அராபிக் உயர்நிலைப் பள்ளி ஒன்றை ஏற்படுத்துவதற்கு முயற்சி செய்கின்றார்கள். முஸ்லிம் மக்கள், அதிலும், குறிப்பாக பெண்களுக்கு நல்ல ஒரு கல்வியைத் தரவேண்டும் என்று அரசு கடமை கொண்டுள்ளது. அந்தக் கடமையை நிறைவேற்றும் முகத்தான் இந்த முயற்சிக்கு ஆதரவு தந்து அந்த ஊரில் எப்படியும் ஒரு பெண்கள் உயர்நிலைப் பள்ளி ஏற்படுவதற்கு தக்க ஏற்பாடுகளை செய்ய அரசு முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர்களே, பள்ளிக் குழுவினரோ அல்லது நிர்வாகத்தினரோ விண்ணப்பங்களை முதலில் மாவட்ட கல்வி ஆய்வாளர், பள்ளி ஆய்வாளருக்கு அனுப்பி வைக்கவேண்டும். அந்த

விண்ணப்பத்தை கல்வி ஆண்டில் டிசம்பர் 31-ம் தேதிக்குள் அவர்கள் சமர்ப்பிக்கவேண்டும். அதை ஆய்வாளர் பள்ளிக் கல்வி இயக்குநருக்கு ஒவ்வொரு ஆண்டும் ஜனவரி 31-ம் தேதிக்குள் அனுப்பிவைக்கவேண்டும். பள்ளிக் கல்வி இயக்குனர் தன்னுடைய பரிந்துரையை அரசுக்கு ஏப்ரல் திங்களுக்குள் அனுப்பிவைக்கவேண்டும்.

அது மட்டுமல்லாமல் அதற்குப் பிறகு, அவர்கள் ஆய்ந்ததற்குப் பிறகு அங்கே ஒரு பெண் பள்ளி ஏற்படுத்துவது அவசியம்தானா என்பதும், அதற்கேற்ற அளவுக்கு மகளிர் இருக்கின்றார்களா என்பதும், புதிய பள்ளிக்கு ஏற்றத்தக்க அளவுக்கு 5 ஏக்கர் நிலம், 10,000 ரூபாய் வைப்பு நிதி கட்டுகின்ற வாய்ப்பு, புதிய கட்டடத்திற்கு ரூ. 12,500 வழங்குகின்ற வாய்ப்பு இதெல்லாம் சரியாக இருக்கிறதா என்று ஆய்ந்ததற்குப் பிறகு, அரசு அளவில் முடிவு எடுக்க வேண்டி வரும். இந்தக் கட்டங்களெல்லாம் முடிந்து அரசுக்கு வரவேண்டும். அதற்குப் பிறகு அரசின் தன்மை என்ன என்பதையும், முடிவு என்ன என்பதையும் சொல்ல இயலும்.

திரு. வா. மை. அப்துல் ஜப்பார் : அமைச்சர் அவர்கள் சொன்னதைப் போல ரூ. 10,000-க்குப் பதிலாக ரூ. 5,000 கட்டி அவர்கள் விண்ணப்பம் செய்துள்ளார்கள். கொஞ்சம் காலம் தாழ்ந்துவிட்டுப் போனாலும் கூட, அமைச்சர் அவர்கள் தனியாக சலுகை காட்டி, அந்த மாதிரி அங்கே ஒரு உயர்நிலைப் பள்ளி ஏற்படுத்துவதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : நான் சொன்ன நிபந்தனைகளெல்லாம் நிறைவேற்றப்பட்ட வகையிலே அரசு அதைப் பரிசீலிக்க வேண்டி வரும்.

திரு. பெ. சௌந்தரபாண்டியன் : மாண்புமிகு உறுப்பினர் ஜப்பார் அவர்கள் தன்னுடைய தொகுதிக்கு எந்தக் காரியமும் செய்யவில்லை என்று கொஞ்சம் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். ஆகவே, இதைக் கொஞ்சம் அனுதாபத்தோடு கவனித்து, அது பின்தங்கியபகுதியாக இருக்கிற காரணத்தினால் அங்கே பெண்கள் உயர் நிலைப் பள்ளியை துவக்க அரசே முயற்சி எடுத்துக்கொள்ளுமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : இது கேள்வியாக ஆகாது. சிபார்சு தான். நான் முதலிலே சொல்லியபடி நிபந்தனைகளெல்லாம் நிறைவேற்றப்பட்டுவருகிற சூழ்நிலையில் அரசு கட்டத்தில் அது ஆய்வு செய்யப்படும்